1968 பிப்ரவரி 29]

திரு. தோ. மு. நல்லசாமி : தலைவரவர்களே, இதுவரைக்கும் ஆரம்பிக்கப்பட்ட ஆஸ்பத்திரிகளில் போதிய அளவு டாக்டர்கள் இல்லை என்ற குறை இருந்தது. ஆனால் இப்போது மருத்துவம் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் எதிர்காலத்தில் அந்த நிலை இருக்காது என்று தெரிகிறது. ஆகவே, அதிக ஆஸ்பத்திரிகளைத் துவக்க வேண்டிய அவசியத்தை அரசாங்கம் உணர்ந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்வியோடு இது தொடர்புடையது அல்ல.

திரு. கே. சகாதேவக்கண்டர் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை பஞ்சாயத்து யூனியன்களில் பிரைமரி ஹெல்த் சென்டர்கள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை, அப்படி ஆரம்பிக்கப்படாத பஞ்சாயத்து யூனியன்களுக்கு நடமாடும் ஆஸ்பத்திரி வசதியை விஸ்தரிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது எம்.பி.பி.எஸ். படித்தவர்கள் ஏராளமாக இருப்பதாகக் கூறினார்கள். இப்பொழுது இருக்கின்ற சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும் டாக்டர்கள் அதிக நோயாளிகளைப் பார்க்க முடியாமல் திண்டாடுகிறார்கள் என்ற புகார் வந்து கொண்டிருக்கிறது. அந்த இடங்களில் டாக்டர்கள் சரியாகப்பார்ப்பது இல்லை என்று சொல்கிறார்கள். எனவே அந்த இடங்களில் டாக்டர்களை அதிகப்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லை என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசினர் மருத்துவ மனை, திருப்பூர்

*109 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் உள்ள அரசினர் மருத்துவமனையை விரிவு படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) போதிய பண வசதியை நன்கொடையாகப் பெற்றவுடன் அரசு ஒப்புதல் அளித்து இவ்வேலை துவங்கப்படும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, திருப்பூர் நகரில் ஒரு லட்சத்து பத்தாயிரம் பேர்கள் இருக்கிறார்கள். திருப்பூர் பஞ்சாயத்து யூனியனில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. திருப்பூரை விடச் சிறிய ஊர்களான ஈரோடு போன்ற வேறு பல ஊர்களில் பெரிய ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. ஆனால் இந்த ஊரில் ஒரு ஆண் டாக்டரும், பெண் டாக்டரும் மட்டும் இருப்பது இந்த நகரத்துக்குப் போதுமானதாக இல்லை. ஆகவே விரைவில் திருப்பூர் ஆஸ்பத்திரியை விரிவுபடுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆஸ்பத்திரியை விரிவு படுத்த எற்கெனவே ஒரு கமிட்டி மூலமாக 5 லட்சம் ரூபாய் வசூலித்துக் கொடுப்பதாக திருப்பூர் பொது மக்கள் சார்பில் சொல்லப்பட்டது. ஆனால் இப்பொழுது 1½ லட்சம் ரூபாய்தான் வசூலித்துக் கொடுக்க முடியுமென்று சொல்லப்படுகிறது. எனவே, கனம் உறுப்பினர் அவர்கள் அவர்களது தீவிர முயற்சியின் காரணமாக நன்கொடை வசூலித்துக் கொடுத்தால் இதைக் கவனிக்கலாம்.

திரு. நா. காசிராமன் : சார், இந்த திருப்பூர் ஆஸ்பத்திரியை விஸ்தரித்து விரிவுபடுத்த ஆகும் மதிப்பீட்டுச் செலவைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, அண்மையில் டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீஸஸ் திருப்பூருக்கு வந்தபொழுது அங்கு வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கையைப் பார்த்த பிறகு அதிகமான டாக்டர்களைப் போட வேண்டுமென்று அரசாங்கத்திற்கு சிபார்சு செய்திருக்கிறார்களா ? அப்படியிருந்தால் விரைவில் அதை அமல் நடத்த, நடைமுறை ஆண்டிலேயே அமல் நடத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்களின் கேள்வி மூலமாகத்தான் இதுபற்றித் தெரிகிறது. அப்படிச் சிபார்சுகள் செய்திருந்தால், தேவை என்று கருதினால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, திருப்பூர் மருத்துவ மனையில் தற்போதுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 41.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. அடுத்து ஒற்றிவைப்புத் தீர்மானங்கள.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

மு.ப. 10-30 **(i) அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் உண்ணாநோன்பு**

Mr. SPEAKER : Dr. Hande will kindly read his notice of the adjournment motion and explain how the subject involves more than the ordinary administration of the law under Rule 50 (viii) of the Assembly Rules.

Dr. H. V. HANDE : Sir, I have given notice of the following adjournment motion—

"That the business of this House stand adjourned to discuss a matter of urgent public importance, namely the students of the Annamalai University going on fast in batches in protest against a Professor."

I request you, Sir, to adjourn the business of this House to discuss the course of action to be taken to restore normalcy in the Annamalai University Campus. All that I say is that this particular thing comes under an extraordinary case and some clarification or assurance given by the Leader of the House will help to quieten the situation.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே ஒரு சூழ்நிலை எற்பட்டு அங்கே இருக்கிற பேராசிரியர் மீது மாணவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தினார்கள். அதுபற்றி கிளர்ச்சி நடத்தினார்கள். அதற்குப் பிறகு சட்டப்படியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு "சின்டிகேட்" அவை கூடி அவர்மீது அதுபற்றி விசாரணை நடத்துவது என்றும் முடிவு செய்தார்கள். அதற்குப் பிறகு அவர் ராஜிநாமா செய்யவேண்டுமென்று மாணவர்கள்